ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களைப் பதிவுசெய்தல் - 2024 ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரித்தல் அத்துடன் சேவைகளை வழங்குதல்

2024 ஆண்டு காலப்பகுதியில் கீழ் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு அத்துடன் சேவைகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்வதற்கு ஆர்வமுள்ள கீர்த்திமிக்க தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களது ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏனைய வியாபார தாபனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## வகை 01 - ஒப்பந்தங்கள்

### துணை வகை

- கட்டடக்கலை ஆலோசனை
- பொறியியல் ஆலோசனை
- சிவில் நிர்மாணம்
- உள்ளக அலங்காரம்
- மின்சாரம்
- கணனி மற்றும் வலையமைப்பு
- இயந்திரவியல்

## வகை 02 - பொருட்கள்

### துணை வகை

- செவிப்புல மற்றும் கட்புல உபகரணங்கள்
- தொலைபேசி சாதனங்கள்
- நுழைவு கட்டுப்பாட்டு முறைமை
- கண்காணிப்பு முறைமைகள்
- கணனிகள், வலையமைப்பு உபகரணங்கள் மற்றும் துணைக் கருவிகள்
- அச்சுப் பொறிகள், நிழற்பிரதி இயந்திரங்கள் மற்றும் ஸ்கானர்கள்
- மென்பொருள் பொதிகள்
- இயந்திரம் மற்றும் உபகரணங்கள்
- கட்டும் பொருட்கள்
- மின்சார கருவிகள் மற்றும் துணைப் பொருட்கள்
- மின்சார உபகரணங்கள்
- இயந்திரவியல் உபகரணங்கள்
- இயந்திரவியல் கருவிகள் மற்றும் துணைப் பொருட்கள்
- கதிரைகள் மற்றும் சோபாக்கள்
- பொதுவான தளபாடங்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள்
- மேசைகள்
- கட்டடப் பொருட்கள் மற்றும் பொதுவான வன்பொருட்கள்
- சுத்திகரிப்புப் பொருட்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- மருந்து உற்பத்திகள்
- சத்திர சிகிச்சைச் சாதனங்கள்
- மருத்துவச் சிகிச்சை உபகரணம்
- பொதுவான அலுவலக உபகரணங்கள்
- பொதுவான அலுவலகக் காகிதாதிப் பொருட்கள்
- கடதாசிச் சுற்றுகள்
- கடதாசி அடிப்படையிலான உற்பத்திகள்
- டோனர்கள், காட்றிச்சுக்கள், றிபன்கள்
- உணவக உபகரணங்கள் மற்றும் சமையலறைப் பொருட்கள்
- உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் துணைப் பொருட்கள்
- நூலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள்
- பாதுகாப்பு உபகரணங்கள்
- பொதுவான புடவைகள்
- விளையாட்டு ஆடைகள்
- சீருடை மற்றும் துணைப் பொருட்கள்

## வகை 03 - பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்

### துணை வகை

- பொதுவான பழுதுபார்த்தல்கள்
- பாரமான இயந்திரங்கள்
- பாதுகாப்பு உபகரணங்கள்
- வாகனங்கள்

## வகை 04 - சேவைகள்

### துணை வகை

- விளம்பரப்படுத்தல்
- விமானப் பயணச்சீட்டு சேவைகள்
- நிர்மாணம் தொடர்புபட்ட சேவைகள்
- அப்புறப்படுத்தல் மற்றும் பொருட்கள் அனுப்புதல் சேவைகள்
- நிகழ்வு முகாமைத்துவம்
- இல்லப் பேணுகை
- ஊடக மற்றும் விளம்பரப்படுத்தல் சேவைகள்
- மனித வலுச் சேவைகள் (ஒப்பந்த அடிப்படையில்)
- கொண்டுசெல்லும் சேவைகள்
- ஏனைய சேவைகள்
- தொழில்சார் சேவைகள்
- அச்சிடல் சேவைகள்
- ஸ்கானிங் சேவைகள்
- தையல் சேவைகள்
- போக்குவரத்துச் சேவைகள்

## விண்ணப்பதாரிகளுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

(i) விலைக் கோரல்கள் பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள்/அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் தயாரிப்பளர்கள்/ஒப்பந்ததாரர்களிடமிருந்து அழைக்கப்படும் எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியானது பதிவுசெய்யாத அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/வழங்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள்/ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைக்கோரல்களை வரவழைப்பதற்கு சுயமாக உரிமையினைக் கொண்டிருக்கும்.

(ii) மத்திய வங்கியானது, பதிவுக்காக கிடைக்கப்பெற்ற ஏதேனும் விண்ணப்பத்தினை மதிப்பீட்டின் மீது அவர்களது உறுதிச்சான்றிதழ்கள் திருப்திகரமற்றதாக இருப்பது கண்டுபிடிக்கப்படுமாயின் நிராகரிப்பதற்கு சுயமான உரிமையினைக் கொண்டிருக்கிறது.

(iii) 2022ஆம் ஆண்டிற்காக ஏற்கனவே வங்கியுடன் பதிவுசெய்துள்ள வழங்குநர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் 2023ஆம் ஆண்டிற்கான பதிவிற்காக மீண்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.

(iv) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது இலங்கை தேசிய நிர்மாண அமைப்புடன் பதிவுசெய்துள்ள ஒப்பந்ததாரர்கள் மாத்திரம் நிர்மாணங்களுக்காக பதிவுசெய்துகொள்வதற்கு தகைமை பெறுவர்.

(v) இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபையுடன் பதிவுசெய்துள்ள விமானப் பயணச்சீட்டு முகவர்கள் மாத்திரம் விமான பயணச்சீட்டு சேவைகளுக்கு பதிவுசெய்துகொள்வதற்கு தகைமை பெறுவர்.

(vi) பாதுகாப்பு பணிகளை வழங்குவதற்காக மாகாண சபையில்/பிரதேச செயலகத்தில் பதிவுசெய்த அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் மூலம் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் மாத்திரம் பாதுகாப்பு ஆளணியினை வழங்குவதற்கு பதிவுசெய்துகொள்வதற்கு தகைமைபெறும்.

(vii) மேலே, (iv), (v) மற்றும் (vi) கீழ் வேண்டப்பட்ட நிபந்தனைகளை விண்ணப்பதாரிகள் நிறைவுசெய்கின்றனர் என்பதனை எண்பிப்பதற்கு அவசியமான ஆவணங்களின் பிரதிகள் முறையாகப் பூரத்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(viii) தேவையான துணையளிக்கின்ற ஆவணங்களை உள்ளடக்காத அத்துடன் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

(ix) வேண்டப்படுகின்ற போது உடனடியாக விலைக்கோரல் சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது பொருட்களை அத்துடன் சேவைகளை உரிய நேரத்தில் விநியோகிப்பதற்குத் தவறுகின்ற அல்லது தரம் குறைந்த பொருட்களை, சேவைகளை, பழுதுபார்த்தல்களை மற்றும் பராமரிப்பினை வழங்குகின்றவர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

## விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

(i) பதிவுசெய்யவதற்கான விண்ணப்பப்படிவம் https://www.cbsl.gov.lk/en/tenders என்ற இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தினுள் நுழைவதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். பதிவுசெய்வதற்கு ஏற்புடைய மீளளிக்கப்படாத கட்டணங்கள் வழங்குநர் பதிவு படிவத்தில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் வலைத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

(ii) முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தொடர்புடைய ஆவணங்களுடன் சேர்த்து 2023 திசெம்பர் 06 அன்று அல்லது அதற்கு முன்னர் supreg@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக மாத்திரம் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கைகளினால் பூர்த்திசெய்து ஸ்கான் செய்யப்பட்ட பிரதிகளை அனுப்பலாம் அல்லது டிஜிட்டல் ரீதியாக பூர்த்திசெய்யலாம்.

(iii) விண்ணப்பங்களின் வன்பிரதிகள் அனுப்பப்படக்கூடாது.

## கொடுப்பனவுகள்

(i) விண்ணப்பதாரிகள் அவர்கள் விண்ணப்பிக்கின்ற விடயத்திற்காக ஒவ்வொரு துணை வகைக்குமான தொடர்புடைய கட்டணத்தினை கொடுப்பனவு செய்வதற்கு வேண்டப்படுகின்றனர். வேண்டப்பட்ட கட்டணத் தொகையினைக் கொடுப்பனவு செய்வதற்குத் தவறுகின்ற வழங்குநர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் ஏதேனும் மேலதிகத் தொகை மீளளிக்கப்படாது.

(ii) பதிவுக்கட்டணங்களை ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினூடாக கொடுப்பனவு செய்யலாம்.

ஏதேனும் மேலதிகத் தகவல்களுக்கு 011-2477919, 011-2477123, 011-2477599 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெறுகைப் பிரிவின் உதவிச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்**
**இலங்கை மத்திய வங்கி**